யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

வினாத்தாள் I | 33 | T | I | ஒரு மணித்தியாலம் One Hours

சுட்டெண் Index No

வரலாறு

பகுதி - I

**1-40 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையினை தெரிவு செய்க.**

1. மகாநாம தேரரினால் எழுதப்பட்டதும் இலங்கையின் வரலாற்றை தொடர்ச்சியாகக் கூறுவதுமான இலக்கியம் எது?

   (1) தீபவம்சம் (2)தாதுவம்சம் (3)மகாவம்சம் (4)போதிவம்சம்

2. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களை பெற்று இலங்கை பற்றி எழுதியுள்ள எழுத்தாளர்களில் போத்துக்கல் நாட்டு இலக்கிய வாதி யார்?

   (1)ரொபேட் நொக்ஸ் (2)பிலிப்ஸ் பில்டியஸ்
   (3)இபன்பதுதா (4)ரிபைரோ

3. பொலன்நறுவைக்காலத்தில் அனுராதபுரத்தை “நுருபுரம்”என அழைத்ததாக கூறும் கல்வெட்டு எது?

   (1)களுதிய பொகுன (2)பனாகடுவ செப்புசாசனம்
   (3)வல்லிபுர பொற்சாசனம் (4)தோணிகல கல்வெட்டு

4. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்களின் இயல்பினை தீர்மானித்த பிரதான காரணி?

   (1)மழைவீழ்ச்சி (2)குளங்களின் பரம்பல் (3)மண்ணின் தன்மை (4)உணவு

5. இலங்கையில் குடியேறிய ஆதி மனித இனம் எது?

   (1)ஹோமோ கிரெக்டஸ் (2)ஹோமோ ஹெபிலஸ்
   (3) ஹோமோ சேப்பியன் (4) ஹோமோ நியன்டதாலன்ஸ

6. அனுராதபுர காலத்தில் இருந்து கோட்டைக்கால ஆரம்பம் வரையான வரராற்றைக் கற்கும் போது அதற்கு உதவும் தேசிய இலக்கிய மூலாதாரங்கள் பெருமளவில் எந்த நோக்கத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ளது?

   (1)சமயம் (2)பொருளாதாரம் (3)அரசியல் (4)சமூகம்



kalvi.lk

7. வரலற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்ததாக கருதப்படும் சிகிரிய பொத்தான அலிகல எந்த வசிப்பிட வகைக்குரியதாகும்?

(1)தாழ்நில ஈரவலயக்குகை (2)கரையோர வெட்டவெளி

(3) )தாழ்நில உலர்வலயக்குகை (4)தாழ்நில ஈரவலய வெட்டவெளி

கீழே தரப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாக கொண்டு 8ஆம் 9ஆம் வினாக்களுக்கு விடைதருக?

A. ருவன்வெலிசாய மிரி'வெட்டிய கட்டப்பட்டமை.
B. இலம்பகர்ண அரசவம்ச முதல் ஆட்சியாளன்.
C. தூபராம தூபியைக் கட்டப்பட்டமை.
D. அரசியல் அதிகாரத்தை முதன்முதல் மையப்படுத்தியவன்.
E. முதன்முதலில் பெருங்குளங்களை கட்டிய மன்னன்.

8. துட்டகைமுனு மன்னன் காலத்துக்குரிய சம்பவங்களை குறிப்பிடும் விடை எது?
(1)AC (2)BD (3)BC (4)AD

9. வசப மன்னனின் ஆட்சிக்காலத்துக்கு உரிய சம்பவங்களை குறிப்பிடும் விடை?
(1)AD (2)BE (3)CD (4)DE

10. அரச அதிகாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்ததன் முக்கிய விளைவாக அமைவது?
(1) அதிகாரம் மத்தியமயப்படுத்தப்படுதல்.
(2) அரசுகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுதல்.
(3) அதிகாரம் பன்முகப்படுத்தப்படுதல்.
(4) பிரதேச ஆட்சியாளன் ஆதிக்கம் பெறல்

11. இலங்கை வரலாற்றில் முதன்முதலில் ஆற்றுக்கு குறுக்காக அனையைக் கட்டிய ஆட்சியாளன் யார்?

(1) வசபன் (2)பண்டுகாபயன் (3)மகாசேனன் (4)இளநாக மன்னன்

12. கல்வெட்டுக்களில் சூரியன், சந்திரன் ஆகிய குறியீடுகள் எதனைச் சித்தரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது?
(1)செழிப்பு (2)மழை (3)உறுதிப்பாடு (4)அரச உடைமை

13. கர்பிணித்தாய்மாரின் தேவைக்காக பிரசவ விடுதிகளை கட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னன்?

(1)முதலாம் உபதிஸ்ஸ (2)நான்காம் காசியப்பன்

(3)புத்ததாஸ (4) பண்டுகாபயன்

14. சீன இராஜதந்திரிகள் 20 முறை இலங்கைக்கு வந்த போது அவர்களை சந்தித்த மன்னன்?

(1)8ம் அக்கபோதி (2)6ம் அக்கபோதி (3)1ம் அக்கபோதி (4) வசபன்

பின்வரும் கல்வெட்டுக்களை அடிப்படையாக கொண்டு 15ம்,16ம் வினாக்களிற்கு விடை தருக?

A. தோணிகல கல்வெட்டு B.மிகிந்தலைக் கல்வெட்டு

C. சொரபொர கல்வெட்டு D.வேவல்கெட்டிய கல்வெட்டு

15. அனுராதபுர காலத்தில் மூன்று போகங்களில் நெற்பயிற்செய்கை இடம் பெற்றதாக கூறும் கல்வெட்டு?
(1) D (2) C (3) B (4) A



Education கல்வி
kalvi.lk

16. நான்காம் மகிந்தனின் வரலாற்றுடன் தொடர்புடைய கல்வெட்டுக்களை குறிக்கும் விடை?

(1) BD (2)AB (3)CD (4)AD

17. கண்டி இராசதானிக் காலத்தில் வரிவசூலிப்பு ஒழுங்கமைப்பில் ''குருவே பத்த'' ''மடிகே பத்த'' போன்றன எதன் செயற்பாடாக விளங்கியது?
(1)போக்குவரத்து சலவைக்கானவரி (2) போக்குவரத்து நெசவுக்கானவரி
(3) யானை பிடித்தல் போக்குவரத்துவரி (4) சலவை நெசவுக்கானவரி

18. புராதன காலத்தில் குடிப்பதற்கான நீரை பெறுவதற்கு கிணறுகளை அமைக்கும் போது பாரிய அளவிலான மட்பாண்டங்களை கிணற்றில் இறக்கி அதன் சுவர்களை மூடிவிடுவதால் எதிர்பாக்கப்பட்டது?

(1)நீர் ஆவியாதலைத் தவித்தல்.

(2) நீரின் அமிலத்தன்மையை நீக்குதல்.

(3)நீரை மேலும் குளிர்மையாக வைத்திருத்தல்

(4)நீரை மிகவும் சுத்தமாக பெற்றுக்கொள்ள.

19. கலைத்துவம் மிக்கதும் நீர் முகாமைத்துவம்,தொழில்நுட்பம் என்பன அமைந்ததுமான மேன்மையான ஆக்கம் என்று மதிப்பிடத்தக்கது?
(1)கற்பாலம் (2)யோதஎல (3)குட்டம்பொய்கை (4)மடைக்கதவு

20. இலங்கையை குறிப்பதற்கு கிரேக்கர் வழங்கிய பெயர்?

(1)தப்ரபேன் (2)செரன்டிப் (3)தம்பபன்னி (4)செய்லோன்

21. காலிங்கராஜர்,சோடகங்கன் ஆகிய தென்னிந்திய ஆக்கிமிப்பாளர்களை சந்தித்த மன்னன் யார்?
(1) 3-ம்புவனேகபாகு (2) 2ம்புவனேகபாகு
(3) 3-ம்விக்கிரமபாகு (4) 1 ம்புவனேகபாகு

22. மொனாலிஸா இறுதி இராப்போசனம் ஆகிய ஓவியங்களை வரைந்து சித்திரக்கலைக்கு பங்களிப்புச் செய்தவர்?

(1)மைக்கல்ஆஞ்சலோ (2)லியனாடோ டாவின்சி (3)தித்தியான் (4)இராபாயேல்

23. பண்டைய சமூகத்தில் குற்றவாளி ஒருவர் ஊரில் மறைந்திருக்கும் வேளை அவரை பிடித்துக்கொடுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது?

(1)கமிகவுக்கு (2)பருமகவுக்கு (3)தசகம்எத்தன் (4)ஊரிலுள்ள அனைவருக்கும்

24. புராதன காலத்தில் வீதிகளின் நீளத்தை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அளவையானது?

(1)கவ்வ (2) வியந்த (3) அங்குலம் (4) கரீசை

25. பின்வரும் மன்னர்களின் இலம்பகர்ண வம்ச மன்னர்களின் விடைத் தொகுதியை தெரிவு செய்க?

A. மகாசேனன்
B. 1ம் கஜபாகு
C. தாதுசேனன்
D. வசபன்
E. வலகம்பா

(1)AC (2)BD (3)BE (4)CE



kalvi.lk

26. கைத்தொழில் புரட்சி முதன் முதலில் எந்த நாட்டில் அரம்பமானது?

(1)இத்தாலி (2)பிரானஸ் (3)இங்கிலாந்து (4)இந்தியா

27. 1730இல் நிலக்கரியை பயன்படுத்தி இரும்பு உருக்கும் முறையை கண்டுபிடித்தவர் யார்?

(1)ஹென்றி பேஸ்மர் (2)வில்லியம் சீமன்ஸ் (3)ஹென்றி கோட் (4)ஆபிரகாம் டாபி

28. நிலக்கரிப்படிவுகள் அதிகளவு காணப்படும் முதன்மையான பிரதேசங்கள்?

(1)தென்வேல்ஸ், யோக்சயர், லங்காசயர் (2)பிளாண்டர், சாக்சனி, நோமண்டி

(3)லுகான், குஜராத், பீஜிங் (4)தென்வேவ், நோமண்டி, சாக்சனி

29. பின்வரும் நிரல் I இல் கண்டுபிடிப்புக்களும் நிரல் Π இல் கண்டுபிடிப்பாளரும் தரப்பட்டுள்ளது பொருத்தமான முறையில்தொடர்பு படுத்தி சரியான விடையை தெரிவு செய்க?

| நிரல் I | நிரல் Π |
|---|---|
| 1. புகைப்படகு | A. ஜோர்ஜ் ஸ்டீவன்சன் |
| 2. மோட்டார் வண்டி | B. ஹென்றி பெல் |
| 3. புகையிரத என்ஜின் | C. ரைட் சகோதரர்கள் |
| 4. புகைக்கப்பல் | D. றொபேட் புல்டன் |
| | E. டெம்ளர் |

(1)BCED (2)EDCA (3)DEAB (4)DACB

30. விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த வரிசையாக நாற்று நடும்முறையை அறிமுகம் செய்தவர்?

(1)றொபேட் பெக்வெல் (2)ஜென் ரோட்டல்
(3)ஹென்றி பெல் (4)சாமுவெல் மோஸ்

31. இலங்கையின் பெருந்தெருக்களையும், புகையிரத பாதைகளையும் அமைப்பதில் முன்னோடியாக செயற்பட்டவர்களை ஒழுங்காக காட்டும் விடை?

(1)எட்வேட்பமண்ஸ், ஹென்றி வோட் (2)றொபேட் பிறவுன்றிக், எட்வேட்பாண்ஸ்

(3) எட்வேட்பாண்ஸ்,ஆதர்கோடன் (4) ஹென்றி வோட், வில்லியம் ஹிரகெரி

32. 1794இல் பிரான்சியர் ஒல்லாந்தை ஆக்கிரமித்த போது ஆட்சி செய்த இளவரசன் யார்?

(1)வில்லியம் ஹோகின்ஸ் (2)றொபேட் அண்றூஸ்

(3)இரண்டாம் வில்லியம்ஸ் (4)5ம் ஒரேஞ் வில்லியம்ஸ்

33. கண்டி இராட்சியம் 1815 இல் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட போது ஆட்சிசெய்த மன்னனையும், ஆளுனரையும் கொண்ட விடை?
(1) கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன், தோமஸ் மெயிற்லண்ட்
(2) ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன், றொபேட் பிறவுன்றிக்
(3) இராஜாதி இராஜசிங்கன், பிறெட்றிக் நோத்
(4) கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன், றொபேட் பிறவுன்றிக்



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

34. 1818ம்,1848ம் ஆண்டுகளில் சுதந்திரப்போராட்டம் இடம் பெற்ற போது ஆளுநர்களாக இருந்தவர்களை காட்டும்விடை?

(1) பிறெட்றிக் நோத், றொபேட் பிறவுன்றிக்
(2) தோமஸ் மெயிற்லண்ட், டொரிங்டன்
(3) றொபேட் பிறவுன்றிக், டொரிங்டன்
(4) டொரிங்டன், எட்வேட்பாண்ஸ்

35. பிரித்தானிய கியுபொயிட், றொபேட் அண்றூாஸ் தூதுக்குளுக்களை சந்தித்த மன்னன்?

(1) இராஜாதி இராஜசிங்கன் (2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (4)ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

➢ பின்வரும் கூற்றுகளை அடிப்படையாக கொண்டு 36ம்,37ம் வினாக்களுக்கு விடை தருக?

A. புதிய வரிகளான நாய் வரி,துவக்கு,தோணி வரிகள் விதிப்பு
B. முகாந்திரம் ஒன்றிற்கு ஹஜ்ஜிமரிக்கார் நியமிக்கப்பட்டமை.
C. புதிய வரிகளான தென்னைவரி,மீன்வரி,உப்புவரி விதிப்பு.
D. கெப்பற்றிப்பொல,மடுகல்ல ஆகியோர் தலைமை தாங்கினர்.
E. வீரபுரன் அப்பு கொங்காலே கொடபண்டா தலைமை தாங்கினார்.

36. 1818ம் ஆண்டு முதலாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய கூற்றுக்களைக் கொண்ட விடை?

(1)AE (2)BC (3)BD (4)CE

37. 1848ம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய கூற்றுக்களைக் கொண்ட விடை?

(1)BC (2)AE (3)CD (4)DE

38. பஞ்சமகா விவாதத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

(1)வஸ்கடுவ சுபுதி தேரர் (2)ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலதேரர்
(3)இந்திரஜோதி தேரர் (4)மீகெட்டுவத்த குணாநந்ததேரர்

39. வெசாக் முழுநோன்மதி தினங்களை விடுமுறை தினங்களாக பிரகடனப்படுத்தியவர் யார்?

(1) ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலதேரர் (2)ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
(3) வஸ்கடுவ சுபுதி தேரர் (4) மீகெட்டுவத்த குணாநந்ததேரா

40. இலங்கையின் மது ஒழிப்பு இயக்கத்தின் தந்தையாக கருதப்படுபவர் யார்?

(1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் (2)அநாகரிக தர்மபாலா
(3)ஆதர்.வீ.தியெஸ் (4)ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கலதேரர்

(40×1=40 புள்ளிகள்)



kalvi.lk

யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
**First Term Examination – 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| வினாத்தாள் II | 33 | T | II | மூன்று மணித்தியாலம் Three Hours |

கட்டெண் Index No

**வரலாறு**

பகுதி **II**

- ❖ பகுதி I இல் முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எமுத வேண்டும்.
- ❖ எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

Education கல்வி அධ්‍යාපන

பகுதி I

1) அ. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலங்கைப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

I. கலா ஓயா, யான் ஓயா, பெட்றிக் கோட்டை, கதிர்காமம், தெவிநுவர, பாகியன்கல, நல்லூர், வனவாகினி, தீகவாவி, மினிகாகல்கந்த, செங்கடகல, இலங்காதுறை

கீழே தரப்பட்டுள்ள பிரதேசங்களை தரப்பட்டுள்ள உலகப்படத்தில் குறித்துக்காட்டுக.

II. மலாக்கா தொடுகடல், கெலிஹுட், பத்தேவிய, சுயஸ்கால்வாய், பர்மா, இஸ்தான்புல்

ஆ.

I. கீழே A, B, C, D ஆகியவற்றின் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வினாக்களுக்கு பொருத்தமான விடைதருக

A. – காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அனுராதபுரத்தில் தனியான வைத்தியசாலையை நிறுவிய மன்னன் யார்.

B. – நிலக்கரிக் கைத்தொழிலுக்கு தேவையான பாதுகாப்பு விளக்கை கண்டுபிடித்தவர் யார்

C. – கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொடுத்த ஜோன்டொயிலியை அரச உத்தியோத்தராக நியமித்த ஆளுனர் யார்

D. – மதுவுக்கு அடிமையாகி கொடிய ஆட்சியாளனாக மாறி மலையகம் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைய காரணமான மன்னன் யார்.



kalvi.lk

II. A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள அவதானித்து கோட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

(அ) படத்தில் காட்டப்பட்டுள்ள உரு யாது

(ஆ) இவ்வுருவம் உக்காலத்துக்குரியது

(இ) இதன் சிறப்பு யாது

(ஈ) இது எதனால் ஆக்கப்பட்டுள்ளது



படம் A



படம் B

ⅲ.(அ) இவ்வுருவில் காணப்படும் நபர் யார்

(ஆ) இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(இ) இவரைக்கவர்ந்த விவாதம் எது?

(ஈ) இவரால் உருவாக்கப்பட்ட சங்கம்?

Education கல்வி අධ්‍යාපන

2)

(1) இலங்கையின் வரலாற்றை கூறும் தொல்பொருள் மூலாதாரம் மூன்று தருக?

(3 புள்ளி)

(2) மேல்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய உள்நாட்டு இலக்கியங்களை தருக?

A. இலங்கையில் முதல் முதல் வெளிவந்த இலக்கியம்

B. இலங்கையின் நீண்டகால வரலாற்றை கூறும் இலக்கியம்

C. இலங்கையின் புத்தசாசன வரலாற்றை கூறும் இலக்கியம்

D. இந்தியாவில் நிலவிய பௌத்த சமயத்தை இலங்கைக்கு கொண்டு வந்த வரலாற்றை கூறும் இலக்கியம்

(4 புள்ளி )

(3) A. பனாங்கடுவ செப்பேடு வல்லிபுர பொற்சாசனத்துடன் தொடர்புடைய மன்னனர்கள் இருவரைத் தருக?

B. இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டவர் மூவரை குறிப்பிடுக?

(2,3 புள்ளி )

(4) தொல்பொருள் மூலாதாரங்களில் கல்வெட்டு முதன்மையானது என்பதை மூன்று காரணி கொண்டு விளக்குக?

(6 புள்ளி )



kalvi.lk

3)

(1) பின்வரும் வரலாற்று தகவல்களுக்கு பொருத்தமான விடையை ஒழுங்காக எழுதுக.

A. ஆரம்ப வரலாற்றுக்காலத்தில் வேலி இட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது.

B. எலும்புக் கூடு வளைத்துப்புதைக்கப்பட்டிருந்தமை எங்கே கண்டுபிடிக்கப்பட்டது

C. தாவர உணவை தீயில் சுட்டு உண்டதற்கான ஆதாரம் எங்கிருந்து கிடைக்கப்பெற்றது.

(2) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் வாழ்ந்த கரையோர திறந்த வாழ்விடங்கள் இரண்டையும் தாழ்நில ஈரவலயக் குகைகள் இரண்டினையும் தருக?

(3) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் உணவுத் தேவையை பூர்த்தி செய்த விதத்தை இரு காரணி கொண்டு விளக்குக?

(4) முன்காலத்தில் வாழ்ந்த மனிதன் தொழிநுட்ப்பத்தை பயன்படுத்திய விதத்தை மூன்று காரணி கொண்டு விளக்குக?

(18 புள்ளிகள்)

4)

(1) பின்வரும் குளத்தை எந்த ஆற்றை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது.

A. கலாவாவி B. நாச்சதுவ வாவி C. குருளுவாவி

(2) A - மகாவலி கங்கையை அடிப்படையாக கொண்டு காணப்படும் கால்வாய்கள் இரண்டு தருக?

B - அபயவாவி, மணிஹீரவாவி என்பவற்றை கட்டிய மன்னனர்களை ஒழுங்காக தருக?

(3) இரும்புதாதில் இருந்து இரும்பு பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பத்தை இரு காரணி கொண்டு விளக்குக?

(4) A – புராதன குளமொன்றில் காணப்படும் பௌதீக உறுப்பக்கள் மூன்று தருக?

B - அக் கூறுகளில் ஒன்றின் அமைப்பு ,செயற்பாடு பற்றி விளக்குக?

(18 புள்ளிகள்)

5)

(1)பின்வரும் யுஇ டீஇஊ ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய மன்னனர்களை ஒழுங்காகத்தருக?

A. தம்பதெனியாவில் தலதாமாளிகையை அமைத்தவன்.

B. அனுராதபுரத்தை ஆட்சி செய்த இறுதி மன்னன்.

C. சிகிரியாவை தனது ஆட்சி நிலையமாக தெரிவு செய்தவன்

(2) இலங்கையின் இரண்டாவது நகராக்க யுகத்தை சேர்ந்த மாயரட்டையின் இரு நகரங்களையும் மலையரட்டையின் இரு நகரங்களையும் தருக?

(3) தம்பதெனியாவில் ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தின் முக்கியத்துவத்தை இரு காரணி கொண்டு விளக்குக?

(4) A - இரண்டாம் நகராக்ககாலத்தில் ஆட்சி நிலையங்களைக் தெரிவு செய்து தொடர்பில் செல்வாக்கு செலுத்திய அடிப்படைக் காரணி இரண்டு தருக?



kalvi.lk

B - 1:- கோட்டை இராசதானியை தலைநகராக்கியவன்.

2:- கோட்டை இராசதானியில் வெளிவந்த இலக்கியம் இரண்டு.

3:- கோட்டை மன்னன் யாரை அனுப்பி யாழ்ப்பாண இராட்சியத்தை வெற்றி கொண்டான்.

6)

(1) கண்டியின் பாதுகாப்புடன் தொடர்புடைய ஆற்றினையும் காணவாய்கள் இரண்டும் தருக?

(2) பின்வரும் வரலாற்று தகவலுடன் தொடர்புடைய மன்னர்களை யுஇடீஇஊஇனு என்ற ஒழுங்கில் தருக?

A. புதிய அரச வம்சத்தை முதன்முதல் தொடங்கிய கண்டி ஆட்சியாளன்
B. முதல் தடைவையாக கண்டியில் சுதந்திரமாக இராச்சியத்தை அமைத்த மன்னன்
C. கி.பி 1580இல் மலைநாட்டின் மீது படையெடுத்த சீதாவாக்கையின் ஆட்சியாளன்
D. மலையக இராச்சியத்தை ஆட்சி செய்த இறுதிச் சிங்களமன்னன்

(3) முதலாம் விமலதர்மசூரியன் கண்டி இராச்சியத்தில் தனது சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகப் பின்பற்றிய நடைமுறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக?

(4)கி.பி 1638ம் ஆண்டு உடன்படிக்கையுடன் தொடர்புபட்டவை.
A. யாருக்கு இடையில் இடம் பெற்றது.
B. அன்னியர் சார்பாக கையொப்பம் இட்டவர்.
C. கண்டியர் சார்பாக கையொப்பம் இட்ட மன்னன்.
D. உடன் படிக்கையில் கூறப்பட்ட வாசகம் மூன்று தருக.

7)

(1) இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பியர் மூவரை தருக?

(2) இலங்கைக்கு வருகை தந்த பிரித்தானிய தூதுக்குழுக்கள் இரண்டை குறிப்பிட்டு சந்தித்த கண்டிமன்னனர்களையும் தருக?

(3) மலையகம் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட ஏதுவான காரணிகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக?

(4) 1848ம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப்போராட்டம்

A. ஏற்பட ஏதுவான காரணம் இரண்டு.
B. கலவரத்தின் போது ஆளுநராக இருந்தவர்.
C. இக்கலவரத்துக்கு தலமை தாங்கியவர்.
D. இக்கலவரத்துக்கு காரணமான வரிகள் இரண்டு தருக.



kalvi.lk

பகுதி-III

8)

(1) மேல்வரும் A,B,C என்பவற்றிற்கு பொருத்தமான விடையை தருக.

A. கி.பி 1454இல் அச்சியந்திரதை கண்டு பிடித்தவர் யார்.
B. பைபிளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தவர்.
C. கி.பி1453இல் துருக்கியர் கைப்பற்றிய கிழக்கு உரோமின் தலைநகரம்.

(2)மேல்வரும் விடயங்களுக்கு பொருத்தமான நாடுகளைத் தருக.

A. முதன் முதல் தேசிய அரசு தோற்றம் பெற்ற நாடு.
B. முதன் முதல் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட நாடு.
C. முதன் முதல் நாடுகாண் பயணத்தில் ஈடுபட்ட நாடு.
D. முதன் முதல் மறுமலர்ச்சி ஏற்பட்ட நாடு.

(3) வைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த வைத்தியர் இருவரை குறிப்பிட்டு விளக்குக.
(4) புவி தொடர்பான கண்டு பிடிப்புக்களை செய்த மூவரை குறிப்பட்டு அவர்களின் கண்டுபிடிப்புக்களை விளக்குக.

9)

(1) கைத்தொழில் புரட்சிக்கு அடிப்படையில் ஆரம்பமான மூன்று கைத்தொழில் துறைகளை குறிப்பிடுக.

(2) கைத்தொழில் புரட்சியின் போது A,B,C,D ஆகிய கண்டுபிடிப்புக்களை செய்தவர்களை தருக.

A. – ஆகாய விமானம்
B. – தொலைக்காட்சி
C. – நீராவி இயந்திரம்
D. – நூனாளி (பறக்கும் தறி ஓடம்)

(3) இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தைழில் புரட்சி விவசாயத்துறையில் வளர்ச்சி ஏற்பட செல்வாக்கு செலுத்திய விதத்தை இரு காரணி கொண்டு விளக்குக.

(4) 19ம் நூற்றாண்டில் ஏனைய நாடுகளிலும் கைத்தைழில் புரட்சி ஏற்பட செல்வாக்கு செலுத்திய காரணி மூன்றைக



kalvi.lk